பாடசாலைக்கு நல்வரவு !





Tamil

## உங்கள் பிள்ளை கற்பதற்கு நீங்கள் பங்களிக்கலாம்!

உங்களுக்கு தெரியுமா ....

• பாடசாலை பற்றிய உங்களது சாதாகமான மனப்பாங்கு பிள்ளை பாடசாலையில் மகிழ்வாக இருத்தல், உற்சாகம் என்பன கற்றலில் மிகபெரிய பங்கினை வகிக்கிறது என்பது? மனநிறைவு சிறந்த கற்றலுக்கு ஒரு நிபந்தனையாகும்.
• வீட்டுப்பாடங்கள் பற்றிய கருத்து, வழிகாட்டல், ஆதரவு, மற்றும் பிள்ளைகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுபவை என்பன மிக முக்கியமானவை என பலருக்கு தெரியாமலிருக்கிறது?
• பிள்ளைகள் என்ன படித்தார்கள் என்ன செய்தார் என்பதைக் காட்டுவது அவர்களுக்கு மிகமுக்கியமானதானது என்பது?
• நீங்கள் பிள்ளைக்கு வீட்டுப்பாடங்களில் உதவும் போது எல்லா வினாக்களுக்கும் விடை தெரிந்திருப்பதைவிட கேள்விகளை கேட்பது அவசியம் என்பது

நீங்கள் இவ்வாறு பிள்ளைக்கு உதவலாம்!

நீங்கள் பிள்ளைக்கு வாசிப்பில் மகிழ்வை ஏற்படுத்த
• பிள்ளையுடன் சேர்ந்து புத்தங்களை வாசித்தல் அல்லது கேட்டல்.
• கதைகள், பகிடிகள் மற்றும் புதிர்களை சொல்லல்.
• மொழி மற்றும் எழுத்துக்களில் விளையாட்டுக்களை ஏற்படுத்தல்.

உங்கள் பிள்ளைக்கு கணக்கிடுவதில் மகிழ்வை ஏற்படுத்த
• நாளாந்த வாழ்வில் பிள்ளையுடன் சேர்ந்து கணக்கிடுவதை தேடுக.
• இலக்கம் மற்றும் உருவ விளையாட்டுக்களை விளையாடுக.
• பிள்ளை படித்ததை கூறும்படியும் கருத்துக்களையும் கேட்கவும்.



## வீட்டிற்கும் பாடசாலைக்குமிடையிலான கூட்டங்களை பயன்படுத்துக!

உங்களுக்கு தெரியுமா...

ஆசிரியருடனான சந்திப்புநேரம்/முன்னேற்றம் பற்றிய உரையாடல் முக்கியமான கூட்டம் என்பது? இது உங்களுடைய பிள்ளையின் தொடர்பாசிரியருக்கும் உங்களுக்குமிடையாலான உரையாடல். ஒரு ஆண்டில் இவ்வாறான இரு உரையாடல்கள் இருக்கவேண்டும் என சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் நீங்கள் பிற பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் சந்திக்கலாம். ஒரு சிறந்த பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு செயற்பாடுகள் மற்றும் உரையாடலைக் கொண்டிருக்கும்.

கேள்வி கேட்கவும்!

பெற்றோர் ஆசிரியர்கூட்டத்தில் நீங்கள் கேட்டகூடியவை:
• பெற்றோரிடமிருந்து எவற்றை பாடசாலை எதிர்பார்க்கிறது?
• பாடசாலையிடமிருந்து நான் எவற்றை எதிர்பார்க்கலாம்?
• பாடசாலையில் கற்பிப்பதை வீட்டில் பின்பற்ற நான் என்ன செய்யலாம்?
• பிறருடன் நன்கு பழகவும் கற்பதற்குமான சிறந்த சூழலை உருவாக்க நான் என்ன செய்யலாம்? பெற்றோர்களிடையேயான நல்ல கூட்டுறவு பிள்ளைக்கு சிறந்தது. நீங்கள் பிற பெற்றோருடன் பழகுவதற்கேற்ற செயற்பாடுகளில் ஆர்வங்காட்டுங்கள்.

பெற்றோர்தொடர்பு ஆகுக !

வருடாந்தம் ஒரே வகுப்பு / பிரிவு அல்லது குழுவில் பிள்ளைகளையுடைய பெற்றோர் பெற்றோர் தொடர்பை தெரிவு செய்கின்றனர். பெற்றோர்தொடர்பு பாடசாலைக்கும் பெற்றோருக்குமிடையிலான தொடர்பு இணைப்பாகும். பெற்றோர் தொடர்பு தொடர்பாசிரியருடன் ஒத்துழைத்து பெற்றோர் ஆசிரியர் கூட்டங்களை திட்டமிடல் செயற்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும். சந்தர்ப்பத்தை பயன்படுத்துக - பெற்றோர்தொடர்பாகுங்கள்!

## முக்கியமானதொடர்புத்தகவல்கள்!

| | பெயர் | தொலைபேசி | மின்னஞ்சல் |
|---|---|---|---|
| ஆசிரியர் | | | |
| பெற்றோர் தொடர்பு | | | |
| பெற்றோர் தொடர்பு | | | |

www.fug.no

ஆரம்ப பாடசாலையின் பெற்றோர்செயற்குழு(FUG) அறிவியற்திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கும் அமைப்பாகும். FUG பாடசாலையில் பெற்றோரின் ஆர்வங்கள், பாடசாலை மற்றும் வீட்டிற்குமிடையே சிறந்த ஒத்துழைப்பிற்கான சூழலை பேணிப்பாதுகாக்கும்.

**Foreldreutvalget for grunnopplæringen**
Postboks 9360 Grønland, 0135 Oslo
post@fug.no

Oversatt ved Tolketjenesten i Oslo